

இராணிப்பேட்டை மாவட்டம் அம்மூர் சமத்துவபுரத்தில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் நினைவு நாள் முன்னிட்டு கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, வாலாஜா ஒன்றிய குழுத் தலைவர் சேஷாவெங்கட் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் குமுதா குமார், நகரச் செயலாளர் பி.பூங்காவனம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், அம்மூர் பேரூர் செயலாளர் பெரியசாமி, பேரூராட்சி மன்றத் தலைவர் சங்கீதா மகேஷ், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சிவா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## இராமநாதபுரத்தில் ஆர்ப்பாட்டம்!

இராமநாதபுரம், டிச. 25–

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துணை முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் வழிகாட்டுதலின்படி

இந்திய அரசியலமைப்பு சட்டத்தை வடிவமைத்த சட்டமேதை, புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து கமுதி வடக்கு ஒன்றிய திராவிட முன்னேற்றக்கழகம் சார்பில் கமுதி பேருந்து நிலையம் முன்பு வி.வாசுதேவன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கமுதி வடக்கு ஒன்றியச் செயலாளர் வி.வாசுதேவன் ஒன்றிய துணைத் தலைவர் அய்யனார்,கமுதி பேரூர் கழகச் செயலாளர் பாலமுருகன் மற்றும் மணிராம கிருஷ்ணன் பாரதி உட்பட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# தந்தை பெரியார் 51வது நினைவு நாள்!

## அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து மரியாதை!

திருவண்ணாமலை, டிச. 25-

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு, பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

24.12.2024 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு, திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமை வகித்தார்.

வடக்கு மாவட்டக் கழக செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன் எம்.பி., மாநில மருத்துவர் அணி துணைத் தலைவர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இரா.ஸ்ரீதரன், பொன். முத்து, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, மாவட்ட துணைச் செயலாளர் பிரியா விஜயரங்கன், நகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், பொதுப்பணி துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் தந்தை பெரியாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் பொதுக் குழு உறுப்பினர் நா.பழனி, ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், பா.ராமஜெயம், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், மங்கலம் பிரபாகரன், இரா.கார்த்திகேயன், கு.கணேஷ், சு.விஜி (எ) விஜயராஜ், பாலமுரளி கிருஷ்ணா, ஏ.டபள்யூ.சர்தார் காசீம், எல்.ஐ.சி. து. வேலு, எஸ்.டி.ஆர்.எஸ். பாபு, பி.கே.ஏ. அருண், கற்பகம் சரவணன், உ.நித்யா, துணை மேயர் சு.ராஜாங்கம், நகர நிர்வாகிகள் சி. சண்முகம், வட்டி அருணாச்சலம், ந.சீனு வாசன், குட்டி க.புகழேந்தி, கோல்டு எஸ். பிரபு, ஹக்கிம் சேட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், வழக்கறிஞர்கள் டி. எம்.கதிரவன், அ.அருள்குமரன், பா.ஷெரீப், ஏந்தர் நாக.சங்கர், இல.சரவணன், எம்.ஆர்.கலைமணி, கிரிக்கெட் ரவி, விஜி.தேவராஜ், ஆ.தே.முருகையன், ஏ.எம். பாஷா, ஏ.கே.ரத்தினக்குமார், துரை.வெங்கட், லக்கி அரவிந்த், ராயல் தியாகு, டி.எம்.வெங்கடேசன், சு.சமயராஜ், ஆர்.வெங்கடேஷ், அறங்காவலர் எம்.வெங்கடேசன், பேரூராட்சி தலைவர் செல்வபாரதிமனோஜ் குமார், தமிழ் மாணவர் மன்ற அமைப்பாளர் பரணி, எஸ்.சுனாபேகம், கஸ்தூரி, சா.தீபலட்சுமி, பச்சையம் மாள்யேசு, கஸ்தூரி, எஸ். மலைவாசன், மு.ரகுவர்மன், கற்பகம் பாண்டியன், வட்டச் செயலாளர்கள் அ.கோவிந்தன், மண்டி ஆ.பிரகாஷ், க.ஏழுமலை, சி.கே.சசிக்குமார், சங்கர், வழக்கறிஞர் அருண் மற்றும் வேங்கிக்கால் விக்ரம், வி.ஐ.பி., காசிநாதன், சம்மந்தம், வி.வினோத்குமார், இரா.க.திலீப்குமார், க.ஞானம், அலிமுகமது, எஸ்.சசிக்குமார், முரசொலி மாறன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### உள்கட்டமைப்பு மேம்பாடு

# ஸ்மார்ட் சிட்டி திட்டங்களை முடிக்க எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!



நாமக்கல், டிச. 25 -

உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் ஸ்மார்ட் சிட்டி திட்டங்களை முடிக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ? என மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

டெல்லியில் நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும, நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு தேசிய உள்கட்டமைப்பு பைப்லைன் (NIP) கீழ் உள்கட்டமைப்பு மேம்பாட்டை துரிதப்படுத்தவும், ஸ்மார்ட் சிட்டி திட்டங்கள் மற்றும் நகர்ப்புற உள்கட்டமைப்பை மேம்படுத்தி, சரியான நேரத்தில் முடிக்கவும், குறிப்பாக பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் பிரிவினருக்கான வீட்டுப் பற்றாக்குறை பிரச்சினையை தீர்க்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் டோகன் சாஹு, நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறை வழங்கிய தகவலின்படி, தேசிய உள்கட்டமைப்பு பைப்லைன் (NIP) அனைத்து மாநிலங்களாலும் செயல்படுத்தப்படும் பொருளாதார மற்றும் சமூக உள்கட்டமைப்புத் துறைகளில் 100 கோடி ரூபாய்க்கு மேல் பிரவுன் ஃபீல்ட் மற்றும் கிரீன் ஃபீல்ட் உள்கட்டமைப்பு திட்டங்களை இந்தியாவின் யூனியன் பிரதேசங்கள் மற்றும் அரசாங்கத்தின் 22 உள்கட்டமைப்பு அமைச்சகங்கள் இந்தியாவின். NIP திட்டங்கள் இந்திய முதலீட்டு கட்டம் (IIG) போர்ட்டலில் உள்ள (https://indiainvestmentgrid.gov.in/) என்ற தளத்தில் பொது முதலீடு மற்றும் தனியார் நிதியுதவி மூலம் நிதியளிக்கப்படும் நடைமுறைச் சுழற்சியின் உள்கட்டமைப்புத் திட்டங்கள் குறித்து தெரிவிக்கப் பட்டுள்ளது.

தேசிய உள்கட்டமைப்பு பைப்லைன் கீழ், ஸ்மார்ட் சிட்டிஸ் மிஷன் மூலம் 76,338 கோடி மதிப்பிலான 650 பல்துறை மாற்றும் திட்டங்கள் எடுக்கப்பட்டு, 592 திட்டங்கள் (91%) 71,192 கோடியில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் முடிக்க ப் பட்டுள்ளன. இது தவிர நீர் சுகாதாரம் மற்றும் சுகாதாரம் (வாஷ்), ஸ்மார்ட் மோட்டார் அல்லாத போக்குவரத்து, பொது சைக்கிள் பகிர்வு, ஸ்மார்ட் எனர்ஜி, பொது இடங்கள், பொருளாதாரம் மற்றும் சமூக உள்கட்டமைப்பான ஸ்மார்ட் வகுப்பறைகள், டிஜிட்டல் லைப்ரரிகள், சுற்றுச்சூழல் மேம்படுத்த கட்டுப்பாட்டு மையங்கள் மற்றும் நகர்ப்புற சேவைகளை திறம்பட நிர்வகிக்க டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தகவல் வழங்குவது,

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ஸ்மார்ட் சிட்டிஸ் மிஷன் திட்டத்தின் கீழ் திட்டங்களின் முன்னேற்றத்தை விரைவுபடுத்த மதிப்பாய்வு கட்டமைப்பைக் கொண்டுள்ளது. தேசிய மற்றும் மாநில அளவில், தலைமைச் செயலர் தலைமையிலான வழிகாட்டுதல் குழு மற்றும் வாரியங்களில் உள்ள நியமன இயக்குனர்கள் மூலமும் பணிகள் கண்காணிக்கப்படுகிறது. தொடர்ந்து மாநிலங்களில் 100 ஸ்மார்ட் நகரங்களில் மதிப்பீடு செய்து, விதிமுறைகளைப் பின்பற்றி இந்திய நகர்ப்புற மேம்பாட்டிற்கான பணிகள் மேற்கொண்டுள்ளப்பட்டு வருகிறது

பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா நகர்ப்புற திட்டத்தின் கீழ் ஜுன் 25, 2015 முதல் விரிவுபடுத்தப்பட்டு நாடு முழுவதும் உள்ள தகுதியான நகர்ப்புற பயனாளிகளுக்கு குறிப்பாக பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் மற்றும் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டை வழங்குவதற்கான திட்டமாகும், இதில் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் செயல்படுத்தும் ஏஜென்சிகள் மூலம் அந்தந்த அதிகார வரம்புகளுக்கு உட்பட்டு, தகுதி அளவுகோல்களின் அடிப்படையில் தேவை கணக்கெடுப்பை நடத்தி மாநில / யூனியன் பிரதேச அரசுகளின் பரிந்துரைகளின் பேரில் 118.64 லட்சம் வீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன, அவற்றில் 114.23 லட்சம் தரைமட்டமாக்கப் பட்டுள்ளன, மேலும் 88.32 லட்சத்துக்கும் அதிகமான வீடுகள் 02.12.2024 அன்று முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

### மீஞ்சூர் வடக்கு ஒன்றியச் செயலாளர்

## ஆசானபுதூர் பா.சுகுமாரன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, டிச. 25-

மீஞ்சூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆசானபுதூர் பா.சுகுமாரன் அவர்கள் நேற்று (24.12.2024) காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.



தந்தை பெரியாரின் 51வது நினைவு தினத்தை முன்னிட்டு தூத்துக்குடியில் உள்ள தந்தை பெரியாரின் சிலைக்கு தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தமிழக மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் உமரிசங்கர், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டேவிட் செல்வின், முன்னாள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பில்லா ஜெகன் ஏராளமான தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

# ஐயா! நின் நினைவிடத்தில் சூளு ரைப்போம்!



ஈரோட்டு நாயகனே! தமிழர் தங்கள்
இனமானச் சூரியனே! எட்டுத் திக்கும்
மார்தட்டிச் சுழன்றுவந்தாய்! மனித னுக்கு
மானமும் அறிவும்தான் அழகே என்றாய்!
கூர்மிக்கச் சிந்தனையால் குரல்கொ டுத்தாய்!
கொட்டாவித் துயில்கலைத்தாய்! எழுச்சி தந்தாய்!
போராடி உரிமைகளைப் பெற்றுத் தந்தாய்!
பொதுப்பணிக்கே கொடைதந்தாய் உனது வாழ்வை!

பாடிவைத்த பழமைகளைச் சாடி வைத்தாய்!
பாமரர்க்கும் பகுத்தறிவை விதைத்தாய்! மூடக்
காடெரித்த யுகக்கனலே! ஐயா, உன்றன்
கைத்தடியின் வளைவிலும்கம் பீரம் உண்டே!
தாடிவைத்த குழந்தைநீ சிரிக்கும் போதில்
தலைமுதல்பா தம்வரைக்கும் மகிழ்ச்சி பொங்கும்!
ஏடெடுத்தே நீ,கணைகள் தொடுக்கும் போதில்
எதிரிகளின் அடித்தளமே நொறுங்கிப் போகும்!

மூன்றுவிழுக் காடுள்ள ஒருகூட் டத்தின்
மூவாயி ரம்வருட ஆதிக் கத்தைச்
சான்றுசொல்லி உலகுக்கே எடுத்து ரைத்தாய்!
சனாதனத்தின் கொடுமைகளைத் தோலு ரித்தாய்!
ஆன்றோராய் சான்றோராய் கல்வி பெற்றே
அடித்தட்டு மக்களையும் உயரச் செய்தாய்!
தோன்றின்நற் புகழோடு தோன்றி வந்தாய்!
தொண்டுசெய்து பழுத்தபழும் ஆகி நின்றாய்!

அலைவைத்த கடலைப்போல் இயங்கி வந்தாய்!
ஆயிரமா? அதற்கதிகம் பிறைகள் கண்டாய்!
வலைவைத்துப் பார்த்தார்கள், அறுத்தெ றிந்து
வலம்வந்தாய் நாடெங்கும்! கொண்டு வந்து,உன்
தலைவைக்க வேண்டும்என்ற நரிக்கூட் டத்தைத்
தரைமட்டம் செய்தாய்! நம் கலைஞ ருக்குச்
சிலைவைத்துப் பேரன்பைப் பொழிந்தாய்! என்றும்
சிதையாத புகழுக்கே புகழ்கொ டுத்தாய்!

தடியெடுத்து நீஅன்று நடந்த தால்தான்
தமிழர்க்கே அறிஞர்அண்ணா கிடைத்தார்! உன்றன்
குடியரசின் உலைக்கூடத் தகிப்பி லேதான்
" குவளைப்பூ" போர்க்கருவி ஆன தென்பேன்!
திடலுக்குள் மட்டும்நீ இல்லை! கண்ணீர்த்
திவலைகளைத் துடைத்தெறிந்து சொல்வேன், எங்கள்
உடலுக்குள் உயிரணுக்க ளெல்லாம் உள்ளாய்!
உனைவிட்டுத் தமிழர்க்கு வரலா றேது?

அரியார்க்கும் அரியாராய் பிறந்து வந்தாய்!
அடுத்தடுத்துச் சாதனைகள் புரிந்து வந்தாய்!
வரலாற்றில் "ஈழவர்"தம் உரிமை வென்றாய்!
"வைக்கம்போர் நூற்றாண்டின்" புகழில் நின்றாய்!
பெரியார்க்கும் பெரியார்நீ! அதனா லன்றோ
பெண்ணுரிமை முன்னுரிமை காணச் செய்து
சரியான பாதைக்கே அழைத்து வந்தாய்!
சமத்துவம் சமதர்மம் தழைக்கச் செய்தாய்!

பட்டாலும் தொட்டாலும் தீட்டு! கண்ணில்
பார்த்தாலும் தீட்டென்றார்! அவரை யெல்லாம்
விட்டாயா? அதிரடியால் விரட்டி வைத்தாய்!
விடுதலையால், குடியரசரால் விடியல் தந்தாய்!
அட்டையைப்போல் உறிஞ்சும்அந்தக் கூட்டம், இன்றோ
"அம்பேத்கர்" பெயர்கூட தீட்டென் கின்றார்!
எட்டிஉதைப் போம்அந்த ஆண வத்தை!
ஈரோட்டு நெருப்பில்அதைப் பொசுக்கி ப்போம்!

வியாபாரக் குடும்பத்தில் பிறந்தாய்! உன்னை
விலைபேச எவராலும் முடிய வில்லை!
நியாயத்தின் வடிவம்நீ, அதனால் உன்னை
நீதிமன்றப் பொய்வலைகள் நெருங்க வில்லை!
தியாகம்நீ செய்யவில்லை! தியாகம் உன்னைச்
செய்தது!நீ தரைவாழ்ந்த உலக வாழ்க்கை
மயானத்தின் முடிவல்ல! காலத் தாலும்
மடியாத சரித்திரத்தின் புதுத்தொ டக்கம்!

நீண்டநெடுந் தொலைநோக்கில் உனது கொள்கை
நீட்சிகண்டு "தளபதி"யின் ஆட்சி கண்டு
தாண்டிமிகக் குதிக்கிற து பகைவர் கூட்டம்!
தலைதூக்கி "மனுதர்மம்" போடும் ஆட்டம்!
மீண்டும்உன்றன் "கைத்தடிக்கு" வேலை வந்து
விட்டதையா! சனாதனத்தை விரட்டு தற்கே!
மூண்டெழுவோம் ஐயா,உன் நினைவி டத்தில்!
முறியடிப்போம் சதியை!எனச் சூளு ரைப்போம்!



**கவிச்சுடர் கவிதைப்பித்தன்**